பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 01 வியாழக்கிழமை 17.11.2022 கதிர் 12

இது ரகசியம் அல்ல!

முதலில் ஒரு நகைச்சுவை. பிறகு விடயத்துக்கு வருவோம்.


இரண்டொரு நாள்களுக்கு முன்னர் நடந்த நிஜமான உரையாடல் இது. வவுனியாவில் முன்னாள் போராளிகள் நலன்புரி அமைப்பின் உருவாக்கம்தொடர்பான கூட்டத்தில்

☞2

# கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுவை கூட்ட ரெலோவும் புளொட்டும் வலியுறுத்தல்



## சம்பந்தனுக்கும் மாவைக்கும் செல்வமும் சித்தரும் கடிதம்







**கொழும்பு,நவம்பர் 17**

**நீண்ட காலமாக நடத்தப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளின் பிரதானிகளை கொண்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்தை உடனடியாகக் கூட்டுமாறு இரு பங்காளிக் கட்சிகளான தமிழ் ஈழ விடுதலை இயக்கமும்(ரெலோவும்) தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும் (புளொட்டும்) சேர்ந்து வலியுறுத்தியுள்ளன.**

☞9

## பருத்தித்துறைக் கடலில் 14 இந்திய மீனவர் கைது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.17

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்ட 14 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

☞2

## பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீட்டை கூட்டமைப்பு எதிர்த்து வாக்களிக்கும்

### ரெலோ தலைவர் செல்வம் திட்டவட்டம்

ரணில் விக்கிரமசிங்கவுடன் நெருங்கிய உறவை பேணிலாலும் வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளுக்கு எதிராக தமது தரப்பினர் வாக்களிக்கவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு ஒதுக்கீடு

☞9

## யாழ். செம்மணிக் குளத்தில் மூழ்கியவரைக் காணோம்!

யாழ்ப்பாணம் செம்மணிக் குளத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி காணமல் போயுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இக் குளத்தை அண்மித்த பகுதியில் வசித்து வருகின்ற 21 வயதுடைய குறித்த இளைஞர் இன்று மாலை தூண்டில் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளார்.

☞9



## கோட்டாபய முகாம் முன் முல்லை மக்கள் எதிர்ப்பு

முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள கோட்டாபய கடற்படை முகாமுக்காக 617 ஏக்கர் காணிகளை சுவீகரிக்கும் நில அளவீட்டு நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிந்த காணி

☞2

## கடற்படையினரின் தாக்குதலில் இந்திய மீனவர் கண் இழந்தார்?



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.17

இலங்கை கடற்படையினரின் தாக்குதலிற்கு உள்ளானவர் என்க் கூறப்படும் ஜோன்சன் (வயது 48) என்ற இந்திய மீனவரே கண்ணை இழந்துள்ளாரெனத் தமிழக மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

☞9

## வவுனியா கல்வியற் கல்லூரியின் ஆசிரிய மாணவன் திடீர் மரணம்

வவுனியா தேசிய கல்வியற் கல்லூரி முதலாம் வருட ஆசிரிய மாணவன் ஒருவர் நேற்றிரவு திடீரென மரணமடைந்துள்ளார்.

முதலாம் வருட ஆசிரிய மாணவன் ஒருவர் காய்ச்சல் காரணமாக தனது சக ஆசிரிய மாணவர்களிடம் உணவு வாங்கி வருமாறு கூறிவிட்டு விடுதியில் படுத்திருந்துள்ளார்.

☞2

## வடக்கின் 5 மாவட்டங்களிலும் இன்று காலையில் மரம் நடுகை

வடக்கு மாகாண மரம் நடுகை மாதத்தை முன்னிட்டு வடக்கு மாகாண விவசாய அமைச்சின் சுற்றாடல் அலகினால் ஏற்பாடு செய்யப்பட்ட மரம் நடுகை விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் நடைபெற உள்ளது.

☞2

## அஜித் கப்ராலும் பி.பி.ஜயசுந்தரவுமே பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணம்!

### அடித்துக் கூறுகின்றார் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ

நாட்டின் பொருளாதாரப் பாதிப்பிற்கு அஜித் நிவார்ட் கப்ரால், பி.பி.ஜயசுந்தர ஆகியோர் பொறுப்புக் கூற வேண்டும் என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் மீதான முதல் நாள் விவாதத்தின் போது உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

2023 ஆம் ஆண்டுக்கான

☞2



# தமிழ்த் தரப்புகள் தமக்கிடையிலான பிரச்சினைகளை விரைந்து தீர்க்க வேண்டும் என டக்ளஸ் வேண்டுகோள்

கொழும்பு,நவ.17

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு பற்றிப் பேசுவதற்கான சூழல் உருவாகியுள்ள நிலையில், தமிழ் அரசி யல் தரப்புக்கள் தமக்கிடையிலான முரண்பாடுகளை நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

மேலும், தமிழர் தரப்புக்களுக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடுகளும், உட்கட்சி முரண்பாடுகளும் கடந்த காலங்களில் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை பலவீனப்படுத்தியிருக்கின்ற அனுபவத்தை மறந்து விடக் கூடாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பாக கடற்றொழில் அமைச்சர் வெளியிட் டுள்ள செய்திக் குறிப்பில் - தமிழ் தேசியக் கூட்டமைப்பில்,

☞2



காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்புப் பிரதிநிதிகள் ஆற்றிய உரைகள் பத்திரிகையில் பிரசுரமாகி, பேசப்பட்ட நாள் அது.

காலையில் கூட்டமைப்பு எம்.பி. ஒருவருடன் தொலைபேசியில் உரையாடினேன்.

'ஹலோ' சொன்னதும் எனது கேள்வி பின்வருமாறு அமைந்தது:-

"நீங்கள் இன்னும் அதே வீட்டில்தான் இருக்கின்றீர்களா?"

"ஓம்..ஓம்.. என்ன சந்தேகம்? ஏன் அப்படி கேட்கின்றீர்கள்?" - என்று விடயம் விளங்காமல் கேட்டார் அவர்.

"இல்லை.. அது விபச்சார வீடு என்கிறார் உங்கள் சகா. அதுதான் கேட்டேன்.." - என்றேன் நான் அப்பாவித்தனமாக.

அவர் கெக்கட்டம் விட்டுச் சிரித்தார்.

"என்ன செய்வது? அதை விடுத்து நாம் எங்கே போவது?" - என்று அவரும் விசனத்துடன் பதில் அளித்தார்.

தமது சகா தங்கள் கட்டமைப்பை விபச்சார வீடு என்று கூறியமை யாருக்கும் சுட்டதாகத் தெரியவில்லை. எல்லோரது மௌனமும் குற்றச்சாட்டை அங்கீகரிப்பது போல ஒரு தோற்றத்தைத் தந்து நின்றது.

தாய் தவறிழைத்தால் குற்றம் சுமத்திப் பேச முடியாது என்பது போன்ற மெத்தனமான மௌனம் கடைப்பிடிக்கப்படுவதாகவே எனக்குத் தோன்றியது. யாரும் கண்டிக்கவில்லை. ஆங்காங்கே பிரதேச சபைகளில் கீழ்மட்ட உறுப்பினர்கள் ஓரிருவர் முணுமுணுத்தமையோடு சரி. வேறு யாருக்கும் சூடு,சுரணை இருந்த மாதிரித் தெரியவில்லை. பலரும் உப்பு போட்டு சாப்பிடுவதில்லையோ.. என்னவோ..!

ஆனாலும் இன்னொரு விடயத்தில் தமிழரசு கட்சிக்குள் இரண்டாம் கட்ட, கீழ்மட்ட தொண்டர்கள், ஆதரவாளர்கள் மத்தியில் எரிச்சலும் சீற்றமும் விசனமும் வெளிப்பட்டமையை ஒரே நாளில் நான் உணர்ந்து கொண்டேன்.

கட்சியின் மூத்த தலைவர் சம்பந்தன் ஐயா விடுத்த அழைப்பை மற்றைய தமிழ்க் கட்சிகள் எல்லாம் கூட்டாக உதாசீனம் செய்ய அல்லது அவற்றைப் புறக்கணிக்க வைக்க கட்சிக்குள்ளேயே மூத்த தலைவர் என்று கூறிக் கொள்ளும் பிரகிருதி பண்ணிய திரைமறைவுச் சதி கட்சி வட்டாரங்களில் எல்லாத் தரப்புக்களிலும் உணரப்பட்டிருக்கின்றது. ஓர் அரை டசினுக்குக் குறையாத கட்சியின் அடுத்த மட்டத் தலைவர்கள், ஆதரவாளர்கள் என்னிடமே தொலைபேசி அழைப்பு எடுத்து அந்தப் பிரகிருதி குறித்துக் குறை கூறியமை மட்டுமல்லாமல், மேலதிக விடயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்வதில் ஆர்வமும் காட்டினர். எல்லா விடயங்களையும் நாம் எழுத்தில் வெளிப்படுத்த முடியாதல்லவா...? எனினும் நேற்று வரிகளுக்கிடையில் அச்சில் வராமல் பூடகமாக நான் தெரிவித்த கருத்துகளைப் பலர் புரிந்து கொண்டனர் என்பது மட்டும் திருப்தி தரும் உண்மை.

கட்சியின் தேசிய மாநாட்டை உரிய காலத்தில் கூட்ட முடியாதவர், தமிழ்க் கட்சிகளை ஒன்று கூட்டப் போகின்றாரா என்று ஓர் இளம் அரசியல்வாதி சீறினார்.

தேசிய மாநாடு என்றதும்தான் ஒரு விடயம் நினைவுக்கு வந்தது.

தமிழரசுக் கட்சியின் யாப்பின்படி கட்சியின் தேசிய மாநாட்டை ஒவ்வொரு வருடமும் கூட்ட வேண்டும். குறைந்த பட்சம் இரண்டு வருடங்களுக்குள்ளாவது தேசிய மாநாட்டை - பொதுச் சபைக் கூட்டத்தை - நடத்த வேண்டும் என்று தேர்தல் ஆணையம் வலியுறுத்துகின்றது.

தமிழரசு கட்சியின் தேசிய மாநாடு இந்த வருடத்திலும் இல்லை என்பது இப்போது உறுதியாகிவிட்டது. இனி அடுத்த ஏப்ரலில் என்று மேலும் ஆறு மாத காலம் தள்ளிப் போடும் கதையைத் தலைமை அவிழ்த்து விட்டிருப்பதாகத் தெரிகிறது.

எனினும், இவ்விடயத்தை ஒட்டி கட்சியின் உறுப்புரிமை பெறாத சிலர், மூத்த சட்ட வட்டாரங்கள் சிலவற்றுடன் உத்தியோகப்பற்றற்ற சட்ட ஆலோசனை கலந்திருக்கின்றனர் எனத் தகவல்.

நான்கு வருடங்கள் தேசிய மாநாட்டை நடத்தாத கட்சியின் பெயரை, அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் பட்டியலில் இருந்து அப்புறப்படுத்தாமல் வைத்திருப்பதற்கு ஆட்சேபம் தெரிவித்து, தேர்தல் ஆணையத்துக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்று விரைவில் தாக்கல் செய்யப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

அப்படி நடந்தாலும் நல்லதுதான். அப்போதாவது ஜனநாயகத்தின் பெயரால் நடக்கும் சர்வாதிகாரம் கட்டுப்படுத்தப்படுமோ தெரியவில்லை.

ஏற்கனவே கூட்டமைப்பின் தேர்தல் சின்னமான 'உதயசூரியனை'ப் பறிகொடுத்தாயிற்று. இனி என்ன? 'வீடு'ம் போனாலும் 'கலங்கரை விளக்கமும்' (வெளிச்ச வீடும்), 'நங்கூரமும்' இருக்கின்றனதானே...!

அப்படிமாறினாலாவது தமிழரசுக்குள் இல்லாத ஜனநாயகக் கட்டுக்கோப்பு கூட்டமைப்புக்குள் வந்து விடாதா என்ற நப்பாசையும் ஆதங்கமும் இல்லாமல் இல்லை.

தன்னுடைய மெத்தனமான போக்கால், தலைமை ஆசைப் பித்தால், தமிழரசுக்கு அப்படி ஒரு சரிவை வாங்கி தராமல் பதவி கதிரையை விட்டு மாவை இறங்க மாட்டார் என்றுதான் தோன்றுகின்றது.

பாவம், தந்தை செல்வா தோற்றுவித்த கட்சி... தந்தையின் தீர்க்கதரிசனப்படி அவர் தோற்றுவித்த கட்சியை செயலாற்ற முடியாத இந்தத் தலைவர்களிடமிருந்து இறைவன்தான் காப்பாற்ற வேண்டும்...!

**- மின்னல் -**

## தமிழ்த் தரப்புகள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கை ரீதியான உடன்பாடுகள் ஏதுமின்றி, தேர்தல் வெற்றிகளை இலக் காகக் கொண்டே கட்சிகள் இணைந்திருக்கின்ற என்பது வெளிப்படையானது.

எனினும், கடந்த காலங்களில் தலைமைக்கான போட்டிகளும், அதனால் உருவாகிய முரண்பாடுகளுமே தமிழ் மக்கள் சார்பில் முன்னெடுக்கப்பட்ட சாத்வீகப் போராட்டங்களும் ஆயுதப் போராட்டமும் வலுவிழந்து போனமைக்கான பிரதான காரணமாக அமைந்திருந்ததுடன், கிடைத்த சந்தர்ப்பங்கள் பல கைநழுவிப் போவதற்கும் காரணமாக இருந்தது.

எனவே, தற்போது உருவாகியுள்ள சூழலையும் தவறவிடாது பயன்படுத்திக் கொள்வதற்கு, தமிழ் தேசியக் கூட்டமைப்பு உட்பட்ட அனைத்து தரப்பினரும், காலத்தை வீணடிக்காது விட்டுக்கொடுப்புக்களின் மூலம் தமக்கு உள்ளே இருக்கின்ற பிரச்சினைகளையும், தமக்கு இடையிலான பிரச்சினைகளையும் தீர்த்துக்கொண்டு முன்னோக்கி நகர வேண்டும் - என்று அழைப்பு விடுத்துள்ளார்.

## அஜித் கப்ராலும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரவு - செலவுத் திட்டம் நிவாரணம் வழங்குவதை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்படவில்லை என்பதை கட்சி பேதமின்றி ஏற்றுக்கொள்கிறோம்.

நாடு தற்போது எதிர்க்கொண்டுள்ள நெருக்கடியான நிலையில் இருந்து மீள்வதற்கான ஒரு ஆரம்பமாக வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

ஒரு தனி நபர் தன்னிச்சையாக எடுத்த தீர்மானங்கள் பொருளாதாரப் பாதிப்பைத் தீவிரப்படுத்தி நாட்டை இந்த நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது.

ஆகவே தனிநபரின் அதிகாரத்தை மட்டுப்படுத்தி, நாடாளுமன்றத்தின் கூட்டுப் பொறுப்பை ஏற்படுத்தும் சூழல் அரசமைப்புத் திருத்தம் ஊடாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

அரசமைப்புப் பேரவைக்கு மூன்று சிவில் உறுப்பினர்களை சபாநாயகர், பிரதமர் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் ஒன்றிணைந்து தெரிவு செய்து, நியமிக்க வேண்டும். சிவில் உறுப்பினர் நியமனம் தொடர்பில் சபாநாயகர் சபைக்கு அறிவிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்.

நாடு இன்று எதிர்க்கொண்டுள்ள இக்கட்டான நிலைக்கு 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பொறுப்புக் கூற வேண்டும் என நாட்டு மக்கள் விமர்சிப்பது நியாயமானது.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டம் நிதியமைச்சினால் தயாரிக்கப்பட்டது. வரவு - செலவுத் திட்டம் தொடர்பான விடயங்களை நாட்டு மக்கள் தெரிந்துக் கொள்ளும் வகையில் நாடாளுமன்றத்தில் 'சுயாதீன வரவு செலவுத் திட்ட காரியாலம்' ஒன்றை ஸ்தாபிக்குமாறு 2007ஆம் ஆண்டு முதல் வலியுறுத்தி வருகிறேன்.

இதுவரை அந்தக் காரியாலயம் ஸ்தாபிக்கப்படவில்லை. எதிர்வரும் ஓரிரு மாதங்களில் நாடாளுமன்ற சுயாதீன வரவு - செலவுத் திட்ட காரியாலயத்தை ஸ்தாபிக்க எதிர்பார்த்துள்ளோம். அரசியல் பரிந்துரைகளுடன் தவறான நபர்கள் அரச உயர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டமையால் நாடு இன்று மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்க்கொண்டது.

2006ஆம்ஆண்டுமத்தியவங்கியின் ஆளுநராக அஜித் நிவார்ட் கப்ராலை நியமிக்கும் போது கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தேன்.

தற்போதைய பொருளாதார பாதிப்புக்கு மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால், ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் பி.பி.ஜயசுந்தர ஆகியோர் பொறுப்புக் கூற வேண்டும்.

அரச வருமானத்தில் வரி வருமானம் பெரும் பங்கு கொண்டுள்ளது. இலங்கை சுங்க திணைக்களத்தின் ஊடாக அரச வருமானத்திற்கு 50 அல்லது 60 சதவீத வருமானம் கூட கிடைக்கப் பெறுவதில்லை. நாட்டில் பொதுவான மற்றும் நிலையான வரி கொள்கை கிடையாது. வகுக்கப்படும் வரி கொள்கை 15 அல்லது 20 வருட காலங்களுக்காவது கடைப்பிடிக்க வேண்டும்.

ஊழல், மோசடி ஆகியன தற்போதைய பொருளாதாரப் பாதிப்புக்குப் பிறிதொரு காரணியாகும். அரசாங்கத்தின் அனைத்து விடயங்களிலும் மோசடி காணப்படுகிறது. ஜனாதிபதி நியமனம்,நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி உறுப்பினர் நியமனம் என்ற அனைத்திலும் ஊழல் மோசடி உள்ளது. அதே போல் முக்கிய அரச நிறுவனங்களில் மோசடி மிகையாகவுள்ளன.

2019ஆம் ஆண்டு வரிச் சலுகை வழங்கப்பட்டமை நாடாளுமன்றத்திற்கு முன் கூட்டியதாக அறிவிக்கப்படவில்லை. வரி சலுகையினால் 600 மில்லியன் ரூபா வரி வருமானத்தை அரசாங்கம் இழந்தது.

வரி வருமானம் இழக்கப்பட்டால் பொருளாதார பாதிப்பு ஏற்படும் என்பதை சிறுபிள்ளை கூட அறியும்,.ஆனால் அரசாங்கம் அறியாமல் இருந்தமை வேடிக்கையானது.

ஊழல்,மோசடிக்கு எதிரான சட்டம் வெகுவிரைவில் நாடாளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

கறுப்புச் சந்தை வர்த்தகர்கள் அரசாங்கத்தை நிர்வகிக்கும் போது முறைகேடான சம்பவங்களே இடம் பெறும். முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவைக் கறுப்பு சந்தை வர்த்தகர்கள் ஆக்கிரமித்திருந்தார்கள். கறுப்புச் சந்தை வர்த்தகர்களுக்கு அடிபணிந்துள்ள அரசியல்வாதிகளை கொண்டு நாட்டை முன்னேற்ற முடியாது.

தேர்தலுக்கு போட்டியிட முன்னர் அரசியல்வாதிகள் தமது சொத்து விவரங்களை பகிரங்கப்படுத்துவது தொடர்பான சட்டம் இயற்றப்படும்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டும் முன்னேற்றமடையவில்லை என எதிர்க்கட்சியின் உறுப்பினர் விஜித ஹேரத் குறிப்பிட்டமை நியாயமானதே. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை 16 முறை பெற்றுக்கொண்டுள்ளோம்.

பெற்றுக்கொண்ட நிதியை சேவை பொருளாதாரத்திற்கு செலுத்தியதால் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியவில்லை. ஆகவே தற்போதைய நெருக்கடியான நிலையை ஒரு படிப்பினையாக கொண்டு செயற்படுவது அனைவருக்கும் சாதகமாக அமையும். - என்றார்.

## வடக்கின் 5 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மரம் நடுகை விழாவை விவசாயத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் மற்றும் மீன்பிடி பிரிவு ஆகிய இணைந்து ஏற்பாடு செய்கின்றமையுடன் மர நடுகை விழாவிற்கான ஒத்துழைப்பை மரம் நடுகை இடங்களின் உள்ளூராட்சி சபைகள் வழங்குகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கல்லுண்டாய் பகுதியிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடு இடது கரைப் பகுதியிலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏ9 மாங்குளம் வீதியின் இரு மருங்கிலும், வவுனியா மாவட்டத்தில் தாண்டிக் குளம் அரசு விதை உற்பத்தி பண்ணைப்பகுதியிலும், மன்னார் மாவட்டத்தில் பாலாவி திருக்கேசரம் பகுதியிலும் ஏறக்குறைய 1500 மரங்கள் நாட்டப்பட உள்ளன.

இவற்றிற்கு மேலதிகமாக வட மாகாண மர நடுகை மாத பகுதியில் வட மாகாண விவசாய அமைச்சின் கீழ் உள்ள திணைக்கள வளாகங்களில் ஏறக்குறைய 600 பழ மரக்கன்றுகள் நாட்டுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் திரு. அ.சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

## கோட்டாபய முகாம் முன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமையாளர்கள் பலர் கடற்படை முகாமிற்கு முன்னால் ஒன்றுகூடி எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் மக்களுக்கு சொந்தமான 617 ஏக்கர் நிலங்களை கடந்த 13 வருடங்களாக ஆக்கிரமித்து பாரிய கடற்படை முகாம் ஒன்றினை அமைத்துள்ள கடற்படையினர் அந்த காணிகளை படை முகாமின் தேவைக்காக கடந்த சில வருடங்களாக நிரந்தரமாக சுவீகரிக்கும் பொருட்டு பல தடவைகள் நில அளவை திணைக்களத்தால் அளவீடு செய்ய எடுத்த முயற்சிகள் காணி உரிமையாளர்களான மக்களினதும் மக்கள் பிரதிநிதிகளினதும் எதிர்ப்பால் கைவிடப்பட்டிருந்தது.

நேற்று அளவீட்டு முயற்சி நடைபெறுவதாக இருந்தது. எதிர்ப்புக்காக மக்களும் மக்கள் பிரதிநிதிகளும் கூடியிருந்தனர். எனினும் அளவீட்டு முயற்சி நேற்று நடைபெறவில்லை.

## பருத்தித்துறைக் கடலில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழகம் நாகபட்டினத்தைச் சேர்ந்த படகில் பயணித்த மீனவர்கள் 14 பேரே நேற்று இரவு பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் அனைவரும் இன்று பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

## வவுனியா கல்வியற் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உணவு வாங்கிக் கொண்டு சக ஆசிரிய மாணவர்கள் அங்கு வந்த போது காய்ச்சல் காரணமாக அந்த ஆசிரிய மாணவன் அவதிப்பட்டுள்ளார். இதனையடுத்து உடனடியாக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதும் அவர் வைத்தியசாலைக்கு வருவதற்கு முன்னரே மரணமடைந்துள்ளார் என வைத்தியர்கள் தெரிவித்துனள்ளனர்.

இதில், வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியில் கல்வி கற்கும் விவசாயப் பாடப் பிரிவின் முதலாம் வருட ஆசிரிய மாணவனான மட்டக்களப்பு, காரைத் தீவைச் சேர்ந்த ஜிந்துஜன் என்பவரே மரணமடைந்தவராவார்.

இதேவேளை, உடற்கூற்று பரிசோதனைக்கு பின்னரே மரணத்திற்கான காரணம் தெரியவரும் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622
kalaikkathiradvt@ gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை - இந்திய பயணிகள் கப்பல் சேவையும் விரைவில்!

## பிரேமலால் ஜெயசேகர தெரிவிப்பு



இலங்கை – இந்திய பயணிகள் கப்பல் சேவையும் விரைவில் ஆரம்பிப்பதற்குரிய பேச்சுகள் இந்திய அரசுடன் இடம்பெற்று வருகின்றன என துறைமுகங்கள் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜெயசேகர தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டு, காங்கேசன்துறை துறைமுகத்தை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை இந்தியாவுக்கு இடையிலான பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிப்பது தொடர்பில் பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன.அந்த பேச்சில் சாதகமான முடிவுகள் எட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் விரைவில் கப்பல் சேவையை ஆரம்பிக்கக் கூடிய சாத்திய கூறுகள் காணப்படுகின்றன.

துறை முகத்துக்கு அருகில் சீமெந்து தொழிற்சாலை ஒன்று இயங்காத நிலையில் காணப்படுகின்றது.

அதனை இயக்குவதன் மூலம் பொருளாதாரத்தை உயர்த்த முடியும். அதன்படி கைத்தொழில் அமைச்சு மற்றும் ஜனாதிபதியுடன் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடி வெகு விரைவில் அதனை இயங்குவதற்குரிய நடவடிக்கையை எடுக்க உள்ளோம்.மேலும் வடக்குக்கான எரிபொருள்கள் தரை மார்க்கமாக பவுஸர்களில் எடுத்து வரப்படுகின்றன. ஆனால் காங்கேசன் துறைமுகம் மீள திறக்கப்படும் இடத்தில் கப்பல்களின் மூலம் எரிபொருளை கூட இலகுவாக கொழும்பிலிருந்து எடுத்து வர முடியும் எனத் தெரிவித்தார்.

# நாட்டு மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாத வரவு – செலவுத் திட்டம்!

## சுரேஷ் குற்றச்சாட்டு



அடுத்த வருடத்துக்கான வரவு–செலவுத் திட்டம் மக்களின் மீது மேலும் சுமைகளை ஏற்றுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது என சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பொருளாதார ரீதியில் பாதிப்படைந்த மக்களின் வாழ்க்கைச் செலவை மேலும் அதிகரிப்பதே இதன் நோக்கம் என்றும் குற்றம்சாட்டியுள்ளார்.

நாடு வங்குரோத்து நிலைமையை அடைந்தமைக்கு முக்கிய காரணமானவர்களிடம் இருந்து அவற்றை மீண்டும் கொண்டுவரும் எந்த திட்டமும் இதில் இல்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமட்டுமன்றி, நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஊழல்களையும் இலஞ்சங்களையும் நிறுத்தி, அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்லக்கூடிய திட்டமும் இல்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான ஒரு வரவு – செலவுத் திட்டம் தமிழ் மக்களுக்கும் ஒட்டுமொத்த நாட்டுக்கும் ஏற்புடையதல்ல என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஆகவே இந்த வரவு – செலவுத் திட்டம் நிராகரிக்கப்பட்டு குப்பைக் கூடைக்குள் வீசப்பட வேண்டிய ஒன்று என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

# வரவு - செலவு திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்க வடிவேல் சுரேஷால் நிபந்தனைகள் முன்வைப்பு!



தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளம் தொடர்பாக வரவு – செலவுத் திட்டத்தில் ஒரு வார்த்தை கூட இல்லை என வடிவேல் சுரேஷ் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

தமது மக்களுக்கு நீதி கிடைத்திருந்தால் வரவு – செலவுத்திட்டத்துக்கு ஆதரவாக இரு கைகளையும் உயர்த்தியிருப்பேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றில் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஆகவே எதிர்காலத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு நீதி வழங்குவது தொடர்பாக பரிசீலிக்குமாறு வடிவேல் சுரேஷ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# இலங்கையில் மீண்டும் பால் மா தட்டுப்பாடு?

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளரின் செயற்பாட்டின் காரணமாக இலங்கையில் மீண்டும் பால் மா தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இறக்குமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தின் அனுமதி கிடைக்காத காரணத்தால் 4 லட்சம் கிலோ பால்மா உள்ளடக்கிய 17 கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்தில் 25 நாள்களாகத் தேங்கியுள்ளன.

இந்த 17 கொள்கலன்களுக்கு 40 லட்சம் ரூபா தாமதக் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளதாகவும் இதன் காரணமாக பால் மாவின் விலையை அதிகரிக்க நேரிடலாம் எனவும் அதன் தலைவர் லக்ஷ்மன் விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

மேலும் வெளிநாட்டில் இருந்து பால் மாவை விநியோகிக்கும் முகவர்கள் இந்தப் பால் மாவை வியட்நாம் மற்றும் இந்தோனேஷியாவுக்கு மீண்டும் அனுப்புமாறு தெரிவிக்கின்றனர் என்றும் குற்றம் சுமத்தியுள்ளார். .

கப்பலில் பால்மா ஏற்றும் போது ஒரு சட்டமும், நடுக்கடலில் வரும் போது ஒரு சட்டமும், கப்பல் கொழும்பு துறைமுகத்தை நெருங்கியதும் மற்றுமொரு சட்டமும் அமுல்படுத்தப்படுவதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தமிழ்ச் சங்க முன்னாள் தலைவர் இராஜகுலேந்திரா நினைவுப் பகிர்வு!

கொழும்பு, நவ. 16

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் தலைவர் அமரர் சிரேஷ்ட சட்டத்தரணி ஜி.இராஜகுலேந்திரா நினைவுப் பகிர்வு நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை பி.ப.5 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தலைவர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் தலைமையில் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அமரரின் சட்டப் பணி, சமூகப்பணி, இலக்கியப்பணி, சங்கப்பணி என்னும் பன்முக நோக்கில் முறையே உரைஞர்களான கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி கே. எஸ். இரட்னவேல், ஸ்ரீ. சந்திரசேகரன் அறக்கட்டளையின் செயலாளர் சட்டத்தரணி திருமதி அனுசா சந்திரசேகரன், கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆயுள் உறுப்பினர் ஆ.சடகோபன், கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் கல்விக்குழுச் செயலாளர் திருமதி பவானி முகுந்தன் ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளார்கள்.

கொழும்புத் தமிழ்ச் சங்க பொதுச் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி நன்றி உரையை நிகழ்த்தவுள்ளார்.

# அரசாங்கத்தின் வருமான இலக்குகள் நியாயமற்றவை என்கின்றார் ஹர்ஷ!



அரசாங்கத்தின் வருமானம் அதிகரிக்க வேண்டும் என்றாலும், 2023 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட வருமான இலக்குகள் நியாயமற்றவை என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய அவர், பெறுமதி சேர் வரி உள்ளிட்ட வரிகளை அதிகரிப்பதன் மூலம் உத்தேச வரி வருமான இலக்குகளை அடைய முடியாது என்றார்.

சில துறைகளுக்கு நியாயமற்ற முறையில் வரி விதிக்கப்படுவதாக தெரிவித்த ஹர்ஷ டி சில்வா, சூதாட்டத்தில் ஈடுபடுபவர்கள் மீதான வரியை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வால் மக்கள் கடும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ள நிலையில் சமூக நலத்திட்டங்களுக்கான ஒதுக்கீட்டை அதிகரிக்க அரசாங்கம் தவறியுள்ளதாக ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, பாதுகாப்பு மற்றும் வீதி நிர்மாணத்துக்கான நிதியை அரசாங்கம் அதிகரிப்பதை விமர்சித்த ஹர்ஷ டி சில்வா, பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண நாடு போராடிக் கொண்டிருக்கும் வேளையில் இவ்வாறான அதிகரிப்பு அவசியமா எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

# வடக்கு மாகாணத்தை போல கிழக்கு மாகாணத்திலும் போதைப்பொருள் விசேட செயலணி அமைக்கவேண்டும்!

## கலையரசன் எம்.பி. வலியுறுத்து



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நாம் சேர்ந்து பயணிக்க வேண்டுமானால் அவர் முதலில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல்லியல் திணைக்களம் மேற்கொண்டு வரும் ஆக்கிரமிப்புகளை நிறுத்த வேண்டும் எனத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த. கலையரசன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற இரண்டாம் வாசிப்பு மீதான முதலாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில் –

பாதுகாப்பு அமைச்சுக்கும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்குமென 5 ஆயிரத்து 390 கோடி ரூபாவை அரசு ஒதுக்கியுள்ளதன் மூலம் இது ஒரு யுத்த கால வரவு – செலவுத் திட்டம் போலவே உள்ளது. எனவே இதில் தமிழ் மக்களுக்கான எந்த அறிவிப்புக்களும் கிடையாது.

மேலும் வடக்கு மாகாணத்தில் போதைப்பொருள் செயலணி அமைக்கப்பட்டது போல் கிழக்கிலும் விசேட செயலணி அமைக்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir


# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## ரணிலும் தேர்தலும்

**இலங்கையின் கடைசி ஜனாதிபதி தேர்தல் நடைபெற்று நேற்றுடன் மூன்று ஆண்டுகள் கடந்துள்ளன.**

**2019 நவம்பர் 16ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் 69 லட்சம் வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டிய கோட்டாபய ராஜபக்ஷ நாட்டின் ஏழாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக நவம்பர் 18ஆம் திகதி பதவி ஏற்றார்.**

**அதன்படி தற்போது பதவியில் இருக்கும் ஜனாதிபதியின் பதவிக்காலம் நாளையுடன் மூன்று வருடங்களைப் பூர்த்தி செய்கிறது.**

**2019 நவம்பர் 18ஆம் திகதி பதவியேற்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுமார் இரண்டு வருடங்கள் 8 மாதங்கள் அதிகாரத்தில் இருந்த நிலையில் கடந்த ஜூலை நடுப்பகுதியில் பதவி துறக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானார்.**

**பதில் ஜனாதிபதியாகவும், பின்னர் ஜனாதிபதியாகவும் பொறுப்பேற்ற ரணில் விக்கிரமசிங்க இப்போது நான்கு மாத காலம் அதிகாரத்தைப் பூர்த்தி செய்து இருக்கின்றார்.**

**இந்த ஜனாதிபதியின் பதவிக்காலத்தில் முதல் மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையில் இரண்டு தேர்தல்கள் தொடர்பாகத் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் அப்பதவியில் இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வருகின்றமை அவதானிக்கத்தக்கது.**

**2020 ஒகஸ்ட் 5ஆம் திகதி நடந்த பொதுத் தேர்தலில் தெரிவான நாடாளுமன்றமே இப்போது செயற்பாட்டில் உள்ளது. அதன் பதவிக்காலம் வரும் பெப்ரவரி 5ஆம் திகதியுடன் இரண்டரை ஆண்டுகளைக் கடக்கின்றது. அதன் பின்னர் மேலும் இரண்டரை ஆண்டு காலம் அதிகாரத்தில் நீடிக்கக்கூடிய அந்த நாடாளுமன்றத்தை ஜனாதிபதி தமக்கு விரும்பிய எந்நேரத்திலும் முற்கூட்டியே கலைத்து, தேர்தலுக்கு உத்தரவிட முடியும்.**

**அதாவது இன்னும் 80 நாள்களின் பின்னர் இந்த நாடாளுமன்றத்தைத் தாம் விரும்பும் எச்சமயத்திலும் ஜனாதிபதி முற்கூட்டியே கலைக்க முடியும்.**

**தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நாடாளுமன்றத்தை முற்கூட்டிக் கலைக்க விரும்புவாரா என்பது வேறு விடயம். ஆனால் அதைச் செய்யும் அதிகாரம் 80 நாள்களில் அவருக்கு வந்து விடும். அதுதான் நிலைமை.**

**அடுத்தது – ஜனாதிபதி தேர்தல். தற்போதைய அதிபர் பதவியின், பதவி காலத்தில் மூன்று ஆண்டுகள் கடந்து விட்டன. இன்னும் ஓராண்டு கடந்தால் – அதாவது 2023 நவம்பர் 18ஆம் திகதிக்குப் பின்னர் – தமக்கு எஞ்சியிருக்கும் ஒரு வருட பதவிக் காலத் தில் எப்போதும் முற்கூட்டியே ஜனாதிபதி தேர்தலை அறிவித்துத் தானும் அதில் ஒரு வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க போட்டியிட முடியும்.**

**பெரும்பாலும் முற்கூட்டிய ஜனாதிபதி தேர்தலுக்கு 2023 நவம்பர் 18ஆம் திகதிக்கு பின்னர் எச்சமயத்திலும் ரணில் உத்தரவிட முடியும். அதற்குத்தான் அவர் காத்திருக்கின்றார் என்கின்றன விடயம் அறிந்த வட்டாரங்கள்.**

# வரவு - செலவு திட்டத்துக்கு எதிராக வாக்களிக்க முடிவு!

## வாசுதேவ நாணயக்கார திட்டவட்டம்



வரவு – செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களிக்க முடிவெடுத்துள்ளதாக ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

2023ஆம் ஆண்டின் வரவு – செலவுத் திட்டம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும், வரவு – செலவுத் திட்டத்தில் மக்கள் நலத்திட்டங்கள் எவையும் இல்லை என்பதால் அதற்கு ஆதரவளிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சிறுவர்கள் மற்றும் பெண்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைத் தீர்வுக்கு தொலைபேசி இலக்கங்கள்!

சிறுவர்கள் மற்றும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண இரண்டு தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அந்த வகையில் சிறுவர்கள் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் மகளிர் பணியகம் ஆகியவை இணைந்தே இந்த இலக்கங்களை அறிமுகம் செய்தன.

இதற்கமைய சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு 1929 என்ற இலக்கத்துக்கும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு 1938 என்ற இலக்கத்துக்கு முறைப்பாடு செய்யலாம். வேலை நாள்களில் காலை 8.30 மணி முதல் மாலை 5.15 மணி வரையில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் முறைப்பாடுகளை சமர்ப்பிக்க முடியும் என அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவை கடுமையாக சாடிய நீதி அமைச்சர்!



இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவிடம் நான்கைந்து முறைப்பாடுகளை சமர்ப்பித்த போதும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான ஆணைக்குழுவால் இந்த நாட்டில் என்ன பலன் என நிதி அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.

தான் முன்வைத்த அந்த முறைப்பாடுகள் தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தம்மிடம் நான்கைந்து மணிநேரம் விசாரணை நடத்தியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டை அழித்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தால் அரசுக்கு ஆதரவு

## ஹர்ஷன ராஜகருணா தெரிவிப்பு

நாட்டை அழித்தவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்தினால் மாத்திரமே அரசாங்கத்துக்கு பங்களிப்பை வழங்க முடியும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

பழைய விடயங்கள் அனைத்தையும் மறந்து நாட்டைக் கட்டியெழுப்ப ஒன்றிணைவோம் என வரவு –செலவுத் திட்ட உரையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் அதனை நாடாளுமன்றில் சுட்டிக்காட்டி கருத்து வெளியிட்ட ஹர்ஷன ராஜகருணா, நாட்டை அழித்தவர்களுடன் இணைந்து செயற்படுவதற்கு உடன்பாடு இல்லை எனத் தெரிவித்தார்.

அமைச்சர்களையும், இராஜாங்க அமைச்சர்களையும் அதிகளவில் நியமித்து, அவர்களுக்கான செலவைக் குறைக்க ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் செயற்படவில்லை என்றும் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.





# வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022



"மரங்களின் பிரதான தொழிற்பாடுகள் புரிந்து கொள்ளப்பட்டு அவை உயிர்வாழ் அங்கிகளாக எம்மால் உணரப்பட்டால், அவை எமக்கு ஆதாயமும் அகமகிழ்வும் தரக்கூடிய என்றும் முடிவில்லாத வளமாக விளங்கும்."

**- நி.தி.மிரோவ் -**
**(அமெரிக்க எழுத்தாளர்)**

# இராஜேந்திரசோழன் பொலன்னறுவையில் ஏழு சிவனாலயங்களை நிறுவி ஆண்டான்!

## அன்று நிர்வாக மொழியாக தமிழே இருந்தது





இலங்கையில் 77 ஆண்டுகள் சோழராட்சி நிலவியது. அதில் இராஜேந்திரசோழன் பொலன்னறுவையில் ஏழு சிவனாலயங்களை நிறுவினான். இன்றும் அதன் எச்சங்கள் பொலன்னறுவையில் காணப்படுகின்றன.

அன்று இலங்கை முழுவதும் நிர்வாக மொழியாக தமிழ் மொழியே இருந்தது.

நம்புவீர்களா? ஆனால் அதுதான் உண்மை.

வரலாற்றை நோக்குகின்ற போது பத்தாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் இந்தியாவில் இருந்து படையெடுத்த இராஜராஜ சோழன் இலங்கைத் தலைநகராக இருந்திருந்த அநுராதபுரத்தைக் கைப்பற்றி ஆட்சி செய்தான்.

பின்னர் போரில் அநுராதபுரம் வீழ்ச்சியுற தெற்கே உள்ள பொலன்னறுவையை கைப்பற்றி தலைநகரமாக்கினான்.

1007 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் இராஜராஜ சோழனின் மகனான இராஜேந்திர சோழன் இலங்கையைக் கைப்பற்றி முழு இலங்கையையும் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தான்.

அந்தக் காலத்தில் ராஜேந்திர சோழன் அங்கு ஏழு சிவன் ஆலயங்களை உருவாக்கினான்.

அது மாத்திரம் அல்ல, இலங்கையின் பல பாவங்களிலும் ஆலயங்களை அமைத்ததில் ராஜேந்திர சோழனுக்கு பெரும் பங்கு இருக்கின்றது.

1070 ஆம் ஆண்டு வரை இராஜேந்திர சோழன் அதனை சிறப்பாகப் பராமரித்து வந்தான்.

இலங்கையில் 77 ஆண்டுகள் சோழர் ஆட்சி காலம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அதன் போது இலங்கையில் நிர்வாக மொழியாகத் தமிழ் மொழி இருந்ததும் இங்கு ஈண்டு குறிப்பிடத்தக்கது.

இன்றும் அந்த ஆலயங்களின் எச்சங்கள் பொலன்னறுவை நகரில் காணப்படுகின்றன.

கடந்த வாரம் சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையிலான குழுவினர் அங்கு சென்ற பொழுது அதனைக் காண முடிந்தது.

அதன் சில பாகங்களை இங்கு நீங்கள் காணலாம்.







சோழர்கள் ஆட்சிகாலத்தில் 'ஜனநாதமங்கலம்' என பொலன்னறுவை அழைக்கப்பட்டது.

அந்தளவிற்கு இலங்கையில் சைவசமயம் மேலோங்கி இருந்தது.

**விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா**
**காரைதீவு நிருபர்**





# ‘கஞ்சா சாப்பிட்டு சாகலாம்’ இதுவே அரசின் நோக்கம்!

## என்கின்றார் பொன்சேகா

கஞ்சாவை ஏற்றுமதி செய்வது மட்டுமல்லாமல் மக்களை கஞ்சாவிற்கு அடிமையாக்கவே அரசாங்கம் முயற்சி செய்கின்றது என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா குற்றம் சாட்டியுள்ளார்.

கஞ்சாவை ஏற்றுமதி செய்வது தொடர்பாக ஆராய நிபுணர்கள் குழு நியமிக்கப்படும் என 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட உரையில் ஜனாதிபதி அறிவித்திருந்தார்.

இந்நிலையில் இந்த அறிவிப்பு தொடர்பாகக் கருத்து வெளியிட்ட சரத் பொன்சேகா, மக்களை போதையில் இருக்கச் செய்து விட்டு போராட்டம் இடம்பெறுவதை தடுப்பதே நோக்கம் என்றார். கஞ்சாவை ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக, அதை உட்கொண்டு இறக்கும்படி மக்களை வலியுறுத்தும் செயற்பாடே இதுவென சரத் பொன்சேகா குற்றம் சாட்டினார்.

# பிறந்து 42 நாள்களேயான ஆண் குழந்தை உயிரிழப்பு!

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி 2 ஆம் வட்டாரத்தை சேர்ந்த ராஜதீபன் தேனுஜன் எனும் குழந்தையே பிறந்து 42 நாள்களில் உயிரிழந்துள்ளது.

பால் குடித்து விட்டு , குழந்தை தூங்கியதாகவும், சிறிது நேரம் கழித்து குழந்தையை பார்த்த போது, வாய் மற்றும் மூக்கு வழியாக இரத்தம் வந்திருந்தை அடுத்து குழந்தையை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வந்ததாகவும் பெற்றோர் மரண விசாரணையின் போது தெரிவித்துள்ளனர்.

# மாவீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்கள் அஞ்சலிக்காக நல்லூரில்!

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்துக்கு முன்பாக மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

நவம்பர் 21ஆம் திகதி காலை 9 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ள இந்தக் கல்வெட்டுக்கள் நவம்பர் 27 ஆம் திகதி வரையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இருக்கும். அத்தருணத்தில் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு அஞ்சலி செலுத்தமுடியும். இதற்கு அனைவரும் ஒத்துழைப்புத்தர வேண்டுமென யாழ் மாநகர சபை உறுப்பினர் வரதராஜன் பார்த்தீபன் கோரிக்கை விடுத்தார்.

யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இந்த கோரிக்கையை விடுத்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்துக்கு முன்பாக யாழ்.மாநகர சபைக்கு சொந்தமான இடத்தில் உரிய அனுமதிகளைப் பெற்று குறித்த கல்வெட்டுக்கள் வைக்கப்படவுள்ளன.

உயிரிழந்த உறவுகளை நினைவு கூறுவதற்கு அனைவருக்கும் உரிமை உள்ளது. அந்த வகையில் எமது உறவு சகோதர சகோதரிகளை நினைவு கொள்வது யாரும் தடுக்க முடியாது. – என்றார்.

# வரவு - செலவுத் திட்டம் ஒரு ‘மப்பட்’ பட்ஜெட் !

## விஜித ஹேரத் குற்றச்சாட்டு

சர்வதேச நாணய நிதியம் முன்வைத்துள்ள சீர்திருத்தங்களையே அரசாங்கம் முழுமையாக முன்வைத்துள்ளது என தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

‘தேசிய செலவினம் 8,000 பில்லியன் ரூபாவாக நிர்ணயிக்கப்பட டது, இதன் வருமானம் 3,500 பில்லியன் ரூபா மட்டுமே, இதற்கு அரசாங்கம் 4,500 பில்லியன் ரூபா அளவுக்கு அதிகமான கடன்களைப் பெற வேண்டும்.

அவை மிகவும் நெறிமுறை, தெளிவற்ற, நீண்ட கால கருத்துக்களை முன்வைக்கின்றன, ஆனால் பொதுமக்கள் எதிர்கொள்ளும் மிக அழுத்தமான விடயங்களுக்கு தீர்வுகள் இல்லை.

வரி விகிதங்களின் அதிகரிப்பு, நெகிழ்வான மாற்று விகிதம், அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் சீர்திருத்தம் மற்றும் எரிசக்தி விலைகள் 2023 வரவு – செலவுத் திட்டம் மூலம் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ செயல்படுத்தப்பட்டுள்ளன.

இது ஒரு ‘மப்பட’ பட்ஜெட் என்று அழைக்கப்படலாம், இது நாட்டுக்கு பயனடையக்கூடிய பொருளாதார சீர்திருத்தங்களைக் கருத்தில் கொள்ளாமல், சர்வதேச நாணய நிதியம் அமைத்த அனைத்து சீர்திருத்தங்களுடனும் இணைந்துள்ளது.
– என்றார்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## எங்கே கூட்டிப் போகிறார்கள் தமிழ் மக்களை?



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 183

சம்பந்தன் தரப்புகளுடன் பேசி ரணில் ஒரு தீர்வுக்கு வருவாரா, 'லைக்கா' சுபாஸ்கரனின் வரவு 'அரசியல் நகர்வு' என்பவை பற்றியே பல வாசகர்கள் என்னிடம் அளவிலாவினார்கள். நான் கூட, தகவல்களுக்காக, பேச்சு கொடுத்தேன். ரணில், தமிழ் தரப்புகளுடன் கூடிப் பேசி தீர்வுக்கு வருவாரா என்றால், 'வருவார் ஆனால் வரமாட்டார்' என்ற பாணியை விட்டு, உறுதி அளிக்க வரமாட்டார் என்றுதான் எனக்குத் தோன்றுகின்றது.

ஏன் என நீங்கள் யோசிக்கலாம். அது நடவாதது என்பது எங்களுக்கு தெரிந்ததுதானே என்றும் நீங்கள் எறிந்து விட்டுப் போகலாம். ஆனால் ஏன் என்பதற்கான அரசியலை புரிந்து கொள்ள வேண்டும்.

முதலாவது, தீர்வுக்கான பேச்சு என ரணில் நாடாளுமன்றத்தில் பேசிய நாளிலிருந்து தமிழ்க் கட்சிகள் இடையே நடக்



மஹிந்த

கும் திருவிளையாடல்களையும் அல்லது கழுத்தறுப்புகளையும் ஊடகங்கள் வாயிலாக தமிழ் மக்கள் காண்கிறார்கள். ஆதலால் நானும் 'அவர் சொன்னது', 'இவர் சொன்னது' என விலாவாரியாக பதிவிடவில்லை.உங்களது நெஞ்சே உங்களுக்குச் சொல்லும். இவை தமிழ் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிக்காக நடத்தப்படும் செயற்பாடுகளா, அன்றில் தங்களது தனிப்பட்ட சுயநலன்களில் எழுந்த தனி மனிதர்களின் வெளிப்பாடா என்பது. ஆகவே தமிழ்ப் பரப்புகளே தங்கள் இருப்புக்காக, தாங்கள் பத்திரிகை அறிவிப்புக்கள் விட வேண்டும் என்பதற்காக, தீர்வு ஒன்றை அடையக்கூடிய சாத்தியக்கூறுகள் இருந்தாலும் அதனை அடைந்து கொள்ள விட மாட்டார்கள். நண்டுகளின் பாரம்பரியத்தில் அவர்களே அவர்களின் முதல் விரோதிகள்.

இரண்டாவது, பேரினவாதத் தரப்பை கவனிக்க வேண்டும். நான் பேரோண்மைத் தரப்பு என்று இப்பொழுது குறிப்பிடவில்லை. தீர்வு ஒன்றினை, நாட்டின்



ரணில்

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டுகொள்ள தாம் வழங்கி, ஒற்றுமையாக முன்னேற வேண்டும் என்ற முனைப்பு எந்தப் பேரினவாதத் தரப்பிலும் இருந்து எழவில்லை. காலி முகத்திடல் போராட்ட காலங்களில் போராடிய தலைவர்களிடமிருந்து, 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்ற கொள்கை பிரகடனம் எதுவும் வரவில்லை. அந்தப் போராட்டத்தில் பின்னணிகளில் இருந்தவர்கள் என உரிமை கோரும் ஜே.வி.பி., இடதுசாரி சோசலிச முன்னணி போன்றவை இதற்கு காரணமாகலாம். ரணில் இந்தப் போராட்டங்களின் தொடக்கங்களில் போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக இருந்தாலும், என்றைக்கும் அவர் இந்திய ஒப்பந்தத்துக்கோ 13ஆவது அரசமைப்பு திருத்தத்துக்கோ ஆதரவானவர் அலற்ற். சஜித் பிரேமதாசா தாங்கள் பதவியேற்றால் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவோம் என அறிக்கைதான் தந்தார். பின்னர் ஜனாதிபதி தேர்தலில் டலஸ் அழகப்பெருமாவை ஆதரிக்கக் கோரும்போது டலஸ் – சஜித் – ஜி.எல். பீரிஸ் போன்றோர் கூட்டமைப்பு கேட்டிருந்த கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக எழுத்தில் தரப்பட்டது என கூட்டமைப்பின் அறிக்கைகள் வந்தன.



பண்டா - செல்வா ஒப்பந்தம்

அவர்களில், எவராவது ஜே.வி.பி. உட்பட, இனப் பிரச்சினைக்கான தீர்வு, காலம் கடந்து மேலும் புரையோடிப் போகிறது, இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், தாங்கள் ஏற்றுக் கொண்டதின் அடிப்படையில் ஏற்படுத்தப்படும் தீர்வுக்கு ஆதரவு தருவோம் என அறிவிப்பைந் தரவில்லை.

கூட்டமைப்பினர் கூட அந்த எழுத்து ஒப்புதலை ரணிலிடம் தந்து அவரின் நிலை என்ன என வினாவி இருக்கலாம்.


மூன்றாவது, பேரோண்மையும் பேரினவாதமும் தமிழ் அரசியல் பரப்பை போல், இனப் பிரச்சினையிலேயே தங்கள் வாக்குப் லங்களை ஆட்சிக்கு வருவதற்காக ஏற்படுத்திக் கொண்டவர்கள். ஒரு பகுதி தீர்வை ஏற்படுத்தினால், அடுத்த தரப்பு அதனை எதிர்ப்பதும், நாடு தமிழர்களுக்கு விற்கப்பட்டு விட்டது எனக் கூப்பாடு போடுவதும், பண்டா – செல்வா ஒப்பந்த காலத்திலிருந்து சிங்கள கட்சிகளின் பரவணி நெறியாகிவிட்டது.



காலிமுகத்திடல் போராட்டம்

ஆகவே சஜித் – டலஸ் –ஜி.எல். பீரிஸ் ஏற்றுக்கொண்டவற்றைத் தர ரணில் ஒத்துக் கொண்டாலும், அதனை அடுத்த தேர்தலுக்காக அவர்கள் எதிர்ப்பார்கள் என்பது ரணிலுக்கும் தெரியும். தான் தேர்தலில் வெல்ல வேண்டுமானால் தமிழ் மக்களது தனித்துவமான கோரிக்கைகளுக்கு இணங்கினால், பேரோண்மையின் கோபங்களை வாக்குச் சந்தடிகளில் சந்திக்க நேரும் என்பதை ரணில் அறிந்து கொண்டு உள்ளார்.

நான்காவது, மஹிந்த ராஜபக்ஷ'தமிழ் மக்கள் ரணில் எடுக்கும் முனைப்பை ஏற்று அவர் கையைப் பற்றி இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை அடைந்து கொள்ள வேண்டும்' என அறிவிக்கிறார். 'சாத்தான் வேதம் ஓதுவது போல' இது படவில்லையா? ஏனெனில் இவற்றால் தங்களுக்கு அவர் அனுகூலங்கள் தேடுகின்றார்.' தமிழ் மக்களுக்கு என்ன பிரச்சினை? அவர்களுக்கு இருப்பது பொருளாதாரப் பிரச்சினை தான்'என்பது அவர் தரப்பின் கணிப்பு. அந்த கணிப்பில் அவர் தமிழ் மக்களுக்கு பிரச்சனை என்று இல்லாமல், வடக்கு – கிழக்குத் தரப்புகளைப் பிரித்து, வடபகுதி உடனேயே பொருளாதாரப் பிரச்சினை பற்றி பேச முற்படுகிறார் – தங்களால் கிழக்கைக் கவனிக்க முடியும் என்ற தெம்பில்.



ஸ்ரீகாந்தா

ஐந்தாவது, சட்டத்தரணியும் தமிழ் தேசிய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினருமான ஸ்ரீகாந்தச் எழுப்பியுள்ள கருத்து போல் 'அரசியல் தீர்வு பற்றி பேசுவதற்கு இன்னும் என்னதான் இருக்கிறது?'ஒற்றை ஆட்சி முறைமையை அகற்றுவது பற்றி சிந்திப்பதற்கு சிங்கள தரப்பில் ஆளுங்கட்சி உட்பட எந்த கட்சியும் தயார் இல்லை என்றும், ஜனாதிபதியும் அவரின் அரசாங்கமும் வெளிநாடுகளின் கருணையில் ஆட்சியில் நீடிக்கும் நிலையில் தமிழர் தரப்புகளுடன் பேச்சுவார்த்தை ஒன்று அவசரமாகவும் அவசியமாகவும் அவர்களுக்குத் தேவைப்படுகிறது என்கிறார் அவர்.

1956 இல் ஏற்படுத்தப்பட்ட பண்டா – செல்வா ஒப்பந்தம் தொட்டு, பின் இணங்கப்பட்டவை எல்லாமே தூக்கி வீசப்பட்டன. அவை எல்லாவற்றிலும் இருப்பவர்களைக் கூட்டி கழித்துப் பார்த்து, இன்றைய நிலையில் சாதகமானது ஒன்றைத் தமிழ் மக்களின் பார்வைக்கு ரணிலோ சிங்கள தரப்புகளோ முன் வைக்கலாம். அதை விடுத்து தீர்வுகள் பற்றி இணக்கங்களுக்கு வருவதற்கு திரும்பத் திரும்ப என்ன பேச வேண்டி இருக்கிறது?

இவற்றை உணராது எப்பொழுதும் பேச்சுக்குக் கூப்பிடுகிறார்கள் என்றால் வரிந்து கட்டிக்கொண்டு வாழையிலை யில் என்ன விழும் என்று பார்க்க, ஓட விரும்பும் தமிழ் தலைவர்களை என்ன சொல்லி அழைப்பது? எப்படி திருத்துவது? அவை மக்களுக்கே வெளிச்சம்.

(வளரும்.....)

காலைக்கதிர் Kalaikkathir

## கடற்படையினரின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராமேஸ்வரத்தில் இருந்து 14ஆம் மீன் பிடிக்க 530 ஆம் இலக்க படகில் வந்த மீனவர்களை சிறை பிடித்த இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் மேற்கொண்டு நீண்ட நேரத்தின் பின்பு அவர்களை விடுவித்தனர் என்று கூறப்படுகிறது . 15 ஆம் திகதி காலை கரை திரும்பிய மீனவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அனுமதிக்கப்பட்ட மீனவர்களில் ஒருவரின் ஓர் கண்ணில் பெரிய பாதிப்பு காணப்பட்டதனால் வேறு மார்க்கம் இன்றி அந்தக் கண் அகற்றப்பட்டு, அவர் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனத் தற்போது தமிழக மீனவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இதன் காரணமாக இராமேஸ்வரம் மீனவர்கள் கடும் அதிருப்தியில் இருக்கின்றனர் எனத் தெரிவிக்கின்றது.

## பாதுகாப்புக்கான நிதி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ச்சியாக அதிகரிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே பாதுகாப்பு ஒதுக்கீட்டிற்கு எதிராக வாக்களிப்போம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அடுத்த வருட வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளை மீளாய்வு செய்ய வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாடு பாரிய உணவுப் பற்றாக்குறை மற்றும் நிதி நெருக்கடியை எதிர்கொள்ளும் நேரத்தில், இதுபோன்ற விடயங்களைத் தீர்ப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று செல்வம் அடைக்கலநாதன் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ். செம்மணிக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு மீன்பிடித்துக் கொண்டிருந்த இளைஞர் குளத்தில் நீராடியும் இருக்கின்றார். இதன் போது நீரில் மூழ்கியுள்ளார் எனத் தெரியவருகிறது.

இதனையடுத்து அப் பகுதி மக்கள் உட்பட பலரும் இணைந்து இரவிரவாக நீண்ட நேரம் தேடுதல் நடத்தி வருகின்றனர்.

எனினும் இதுவரையில் இளைஞரைக் காணவில்லை. இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கூட்டமைப்பின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனும், புளொட்டின் தலைவர் த. சித்தார்த்தனும் சேர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தனுக்கும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கும் அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றனர்.

அந்தக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டவை வருமாறு:-

பல தடவைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தை கூடுவதற்காக கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருப்பினும் அது தொடர்ச்சியாக பல காலம் நடைபெறாமலே இருப்பது கவலைக்குரியது.

இதனால் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருக்கும் அங்கத்துவ கட்சிகளுக்கு இடையிலான கருத்து பரிமாற்றங்கள் சீர்குலைந்துள்ளது. கருத்து வேறுபாடுகள் தோன்றுவதனால் புரிந்துணர்வு அற்ற சூழலே காணப்படுகிறது.

இதைத் தவிர அங்கத்துவக் கட்சிகளுக்கு உள்ளே ஏற்படுகின்ற பூசல்களும் முரண்பாடுகளும் அக்கட்சிகளை மாத்திரம் பாதிக்காது ஒட்டுமொத்த தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் பாதகமாக உருவாகி வருகிறது.

இந்தச் சூழ்நிலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பாரிய நம்பிக்கை வைத்துள்ள தமிழ் மக்களினுடைய எண்ணங்களில் சந்தேகமும் குழப்பமும் தோன்றுவதை அவதானிக்க முடிகிறது. வெளிப்படையாகவே மக்கள் கூட்டமைப்பில் நிலவும் குழப்ப சூழ்நிலைகளை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று பகிரங்கமாகக் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இந்தச் சூழ்நிலையை தொடர விடாமல் தடுத்து நிறுத்தவும், பாரிய தேசிய இயக்கத்தை தொடர்ந்து சிக்கலுக்கு உட்படுத்துகின்ற நடவடிக்கைகளை கட்டுக்குள் கொண்டுவரவும் உடனடியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளின் பிரதானிகளை கொண்ட ஒருங்கிணைப்பு குழுவை கூட்டுவது அவசியம் என்று நாம் கருதுகிறோம்.

ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தை கூட்டுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் மிக விரைவில் அதற்கான கால நேரத்தை அறியத்தருமாறும் தங்களைக் கேட்டுக்கொள்கிறோம். - என்று உள்ளது.







# கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரிக்கு எதிராக நேற்று மக்கள் ஆர்ப்பாட்டப் பேரணி!



கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரியை இட மாற்றக் கோரி கர்ப்பிணித் தாய்மார்கள், பொதுமக்கள் என பலர் ஒன்று கூடி கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது மதுபோதை பாவித்து விட்டு வைத்தியம் பார்க்காதே, வைத்தியசாலைகளுக்கு வரும் நோயாளர்களை அவமதிக்காதே, வெளியேறு வெளியேறு விடுதியை விட்டு வெளியேறு, சீரழிக்காதே சீரழிக்காதே எமது சமூகத்தைச் சீரழிக்காதே என பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய பதாதைகளை ஏந்தியவாறு போராட்டக்காரர்கள் போராட்டத்தை மேற்கொண்டார்கள்.

போராட்டம் இடம்பெறும் இடத்துக்கு புதிதாக நிய மிக்கப்பட்ட கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் நிமால் வருகை தந்து போராட்டக்காரர்களின் கருத்துக்களை செவிமடுத்ததுடன், இனி இதுபோன்ற பிரச்சனைகள் இடம் பெறா என உறுதிமொழியளித்த பின்னர் போராட்டக்காரர்கள் அந்த இடத்தை விட்டு கலைந்து சென்றார்கள்.

இதன் போது போராட்டத்தை மேற்கொண்டு இருந்த பெண்கள் கருத்துத் தெரிவிக்கும் போது, கர்ப்பிணி தாய் மார்களுடன் மிக மோசமான வார்த்தை பிரயோகங் களைப் பாவிப்பது தாதியர்களுடன் முரண்படுவது, தாதியுடன் முரண்பட்டு மன உளைச்சலை ஏற்படுத்தி தற்கொலை முயற்சிக்கு தள்ளுதல் போன்ற நிலை ஏற் பட்டுள்ளதாகத் தெரிவித்திருந்தனர்.

## ஒவ்வொரு எம்.பிக்களுக்கும் வரிக் கோப்பு திறக்க ஏற்பாடு!

### ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு



கொழும்பு, நவ. 17

ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் வரிக் கோப்பை திறக்க நடவடிக்கை எடுக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் எதிர்வரும் காலங்களில் அமுல்படுத்தப்படும் என இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## திலினி பிரியமாலி உள்ளிட்ட நால்வரின் விளக்கமறியல் நீடிப்பு!



திலினி பிரியமாலி உள்ளிட்ட நால்வரின் விளக்கமறியல் எதிர்வரும் நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றால் இந்த உத்தரவு நேற்று (புதன் கிழமை) பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நிதி மோசடி தொடர்பான விசாரணையின் அடிப்படையில், திலினி பிரியமாலி, ஜானகி சிறிவர்தன, இசுரு பண்டார மற்றும் பொரளை சிறிசுமண தேரர் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

## போதைப்பொருளுடன் மூவர் வவுனியாவில் செவ்வாய் கைது!

வவுனியா, நவ. 17

வவுனியா, பாவற்குளம் பகுதியில் மூன்று இளைஞர்கள் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என உளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, உளுக்குளம் பொலிஸார் செவ்வாய்க்கிழமை விசேட கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது, வவுனியா பாவற்குளம் பகுதியில் உள்ள பண்டகசாலை வீதி ஊடாக சென்ற மூன்று இளைஞர்களின் நடவடிக்கையில் சந்தேகம் அடைந்த பொலிஸார், அவர்களை சோதனை செய்த போது அவர்களிடம் இருந்து 50 கிராம் கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து மூன்று இளைஞர்களும் உளுக்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் 18 – 25 வயதிற்குட்பட்ட வவுனியா சூடுவெந்தபுலவு மற்றும் பாவற்குளம் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளின் பின் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் எனவும் மேலும் தெரிவித்தனர்.

## சிவப்பு அரிசி, ரின் மீன், பருப்பு ஆகியவற்றின் விலைகள் குறைப்பு

நேற்று (புதன்கிழமை) முதல் அமுலுக்கு வரும் வகையில் மூன்று பொருள்களின் விலையை குறைக்க லங்கா சதொச நிறுவனம் தீர்மானித்துள்ளது.

ஒரு கிலோ சிவப்பு அரிசியின் விலை 5 ரூபாவால் குறைக்கப்பட்டு 205 ரூபாவுக்கு விற்கப்படும்.

ஒரு கிலோ பருப்பு (சிவப்பு) 9 ரூபா குறைக்கப்படும் 389 ரூபாவுக்கு விற்கப்படும். 425 கிராம் மீன் ரின் 45 ரூபா குறைக்கப்பட்டு 540 ரூபாவுக்கு விற்கப்படும்.



## வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் யாழ். சிறைச்சாலைக்கு விஜயம்!

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நேற்று (புதன்கிழமை) யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு விஜயம் மேற்கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் பாவனை, வன்முறை சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில் போதைப் பொருள்களுடன் கைது செய்யப் படுவோரின் நிலை மற்றும் சிறைச்சாலையின் தற்போதைய நிலைமை தொடர்பில் இந்த விஜயத்தின்போது ஆராய்ந்தார்.

## பருத்தித்துறை நகரசபை வரவு - செலவுத்திட்டம் - 2023 பொதுமக்கள் பார்வைக்கு

பருத்தித்துறை நகரசபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் 1939ம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் 255 பிரிவு 178(3) இற்கு அமைவாக தயாரிக்கப்பட்டு 17.11.2022 ஆம் திகதி தொடக்கம் 30.11.2022 ம் திகதி வரை அலுவலக நேரத்தில் நகரசபை மண்டபத்திலும், பருத்தித்துறை பொது நூலகத்திலும், பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன்.

**யோ. இருதயராசா**
**தவிசாளர்,**
**பருத்தித்துறை நகரசபை.**
**17.11.2022**

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.11.2022இல் வெளியிடப்பெற்றது.